

சேலம் மாவட்டம் ஏற்காடு முன்னாள் அ.தி.மு.க., எம்.எல்.ஏ. இளைய கண்ணு உட்பட 40 பேர் அக்கட்சியை விட்டு விலகி சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ். ஆர். சிவலிங்கம் எம்.பி., சேலம் மத்திய மாவட்டச் செயலாளர் அமைச்சர் இரா. இராஜேந்திரன் ஆகியோர் முன்னிலையில் தி.மு.க.வில் இணைந்தனர். உடன் கிழக்கு மாவட்ட துணைச் செயலாளர் கு. சின்னதுரை, மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ.ஏ.ஆறுமுகம், வாழப்பாடி சக்கரவர்த்தி, அயோத்தியாபட்டணம் ஒன்றியச் செயலாளர் விஜய குமார், நிர்வாகிகள் செந்தில் குமார், குமரவேல், அகரம் ராஜேந்திரன், ஹரி, முருகன், கே.எம்.ஆர். அண்ணாதுரை உட்பட நிர்வாகிகள் இருந்தனர்.

### அ.தி.மு.க. முன்னாள் எம்.எல்.ஏ.

# ஏற்காடு இளையகண்ணு கழகத்தில் இணைந்தார்!

## அமைச்சர் ஆர். ராஜேந்திரன் - எஸ்.ஆர். சிவலிங்கம் எம்.பி. முன்னிலையில்!

சேலம், மார்ச் 9-

ஏற்காடு தொகுதி அதிமுக முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் இளையகண்ணு அக்கட்சியில் இருந்து விலகி சுற்றுலாத்துறை அமைச்சர் ராஜேந்திரன் மற்றும் கிழக்கு மாவட்ட செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் எம்பி ஆகியோர் முன்னிலையில் திமுகவில் இணைந்தார்.

அதிமுகவில் கட்சிக்காக உழைத்தவர்களுக்கு உரிய மரியாதை அளிக்கவில்லை என்றும் மத வாத பாஜக விற்கு துணை போவதாலும் அதிமுகவில் இருந்து விலகி மக்கள் நலதிட்டங்களை செயல்படுத்தும் முதலமைச்சரின் கீழ் பணியாற்றிட உள்ளதாக முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தகவல் தெரிவித்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் நிறைவேற்றும் மக்கள் நலத் திட்டங்களை கண்டு பல் வேறு மாற்று கட்சியினர் திமுகவில் இணைந்து வருகின்றனர்.

இதன் ஒரு பகுதியாக ஏற்காடு சட்டமன்ற தொகுதியின் முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும் மாவட்ட எம்ஜிஆர் மாவட்ட இணை செயலாளருமான இளைய கண்ணு அதிமுகவில் இருந்து விலகி சேலம் மத்திய மாவட்ட திமுக செயலாளரும் சுற்றுலாத்துறை அமைச்சருமான ராஜேந்திரன் மற்றும் சேலம் கிழக்கு மாவட்ட திமுக செயலாளரும் மாநிலங்களவை உறுப்பினருமான எஸ்.ஆர்.சிவலிங்கம் ஆகியோர் முன்னிலையில் நேற்று தி.மு.க.வில் இணைந்தார்.

திமுகவில் இணைந்த முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் இளையகண்ணுவிற்கு அமைச்சர் ராஜேந்திரன் மற்றும் மாநிலங்களவை உறுப்பினர் எஸ் ஆர் சி வி லிங்கம் ஆகியோர் பொன்னாடை அணிவித்து வரவேற்று வரும் சட்டமன்ற தேர்தலில் திமுக வெற்றிக்காக தொடர்ந்து பாடுபட வேண்டும் என்று கேட்டுக்கொண்டனர்.

தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த இளைய கண்ணு, முதலமைச்சரின் திட்டங்கள் அனைத்து தரப்பு மக்களுக்கும் குறிப்பாக கீழ்த்தட்டு மக்களுக்கும் முழுமையாக சென்றடைவதால் தாய் கழகத்தில் இணைந்துள்ளதாகவும், அதிமுகவில் தனது தந்தையும் சட்டமன்ற உறுப்பினராக இருந்துள்ளார் என்றும் கடந்த காலங்களில் கடுமையாக கட்சிப் பணியாற்றியவர்களுக்கு தற்போது உரிய மரியாதை அளிப்பதில்லை என்றும் மதவாத சக்தியான பாஜகவின் கை பாவையாக செயல்படும் எடப்பாடி பழனிச்சாமி செயல்பாட்டால் அதிமுகவினர் பலரும் அதிருப்தியில் உள்ளதாகவும் விரைவில் அதிமுகவிலிருந்து இருந்து 2000 த்திற்கும் மேற்பட்டோர் விலகி திமுகவில் இணைய உள்ளதாகவும் தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் சேலம் கிழக்கு மாவட்ட திமுக துணைச் செயலாளர் சின்னதுரை அயோத்தியா பட்டினம் ஒன்றிய செயலாளர் விஜயகுமார் உள்ளிட்ட பலரும் உடன் இருந்தனர்.





